DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.8**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | Caste | |
| Father's Name | : நாட்ராயன் | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 15.10.2025

**முதல் விசாரணை**

1. நான் புதுப்பையில் குடி இருக்கிறேன் ஒர்க் ஷாப் வைத்து தொழில் நடத்தி வருகிறேன். ஒர்க் ஷாப்பின் பெயர் வீரமாத்தியப்பன் கிரில் ஒர்க்ஷாப் ஆகும். இறந்து போன ராமு என்பவரை எனக்கு தெரியும். அவருடைய ஒர்க் ஷாப்பில் நானும் வேலை செய்திருக்கிறேன் எனக்கு ஏதேனும் வேலை இருந்தால் அவ்வப்போது அவரை கூப்பிட்டுக்கொள்வேன். கடந்த 21.10.2018 ஆம் தேதி என்னிடம் வேலை உள்ளதா என்று இறந்து போன ராமு கேட்டு வந்தார். அன்று காலை 8 மணிக்கு நானும் என்னுடைய தம்பி வீரக்குமார் என்பவரும் பட்டரையில் இருந்தோம். அப்போது இறந்து போன ராமு எங்களிடம் வேலை கேட்டார் அவரிடம் எங்கள் இருவருக்கும் தான் வேலை இருக்கிறது என்றும் உங்களுக்கு வேலை இல்லை என்றும் சொன்னோம். அதன் பிறகு நான் வெளியே சென்று விட்டு மதியம் பட்டறைக்கு வந்தேன். அப்போது மேற்படி ராமு என்னுடைய பட்டரையில் வேலை செய்து கொண்டிருந்தார். அவரை வேலை செய்துவிட்டு சாயந்திரம் கிளம்பிவிடுமாறு சொன்னேன்.

2. அன்று மாலை சுமார் 6.00 மணிக்கு வேலை முடித்து கிளம்பியவுடன் வேலை இருந்தால் மீண்டும் அழைப்பதாக சொல்லி அனுப்பினேன். அன்று மாலை சுமார் 6:30 மணிக்கு ராமுவை தேடி ராமுவின் மனைவி கவிதா மற்றும்

ஹரிதாஸ் ஆகியோர் என்னுடைய ஒர்க்ஷாப்பிற்கு வந்தனர். ராமு குளிப்பதற்காக ஆத்துப்பாலத்திற்கு சென்று இருப்பதாக சொன்னேன். நான் எதற்காக ராமுவை கேட்கிறீர்கள் என்று அவர்களைக் கேட்டபோது தாராபுரத்தில் வீடு வாங்கி இருப்பதாகவும் அது சம்பந்தமாக பேச வேண்டும் என்றும் என்னிடம் சொன்னார்கள். மேற்படி ராமு ஆத்துப்பாலத்தில் குளித்துக் கொண்டிருப்பார் அவரை போய் பார்த்துக் கொள்ளுங்கள் என்று அவர்களிடம் சொன்னேன். ஹரிதாஸ் ஏற்கனவே இரண்டு முறை பட்டறைக்கு வந்து ராமுவை பற்றி விசாரித்து இருந்ததால் புதிதாக இருக்கிறது என்று அவரிடம் கேட்டேன். அவர் ராமு தன்னுடைய நண்பர் என்று சொன்னார் அதன் பிறகு ராமு வரவில்லை அவரை நானும் வேலைக்கு அழைக்கவில்லை. மீண்டும் 24.10.2018 ஆம் தேதி போலீசார் ஒர்க் ஷாப்க்கு வந்தார்கள். என்னிடம் ஒரு போட்டோவை காட்டி அதில் இருக்கும் நபரை தெரியுமா என்று கேட்டார்கள் எனக்கு சரியாக தெரியவில்லை. செருப்பு மற்றும் சட்டை ஆகியவற்றை போட்டோவில் காட்டினார்கள். அப்போது என்னுடைய தம்பி வீரக்குமார் அது ராமுடைய பொருட்கள் என்று சொன்னார். அவர் இறந்துவிட்டார் என்ற பதட்டத்தில் இருந்தேன். போலீசார் என்னை விசாரணைக்காக அழைத்துச் சென்றார்கள். 28.10.2018 ஆம் தேதி போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். 08.01.2019 ஆம் தேதி மேற்படி விபரம் தொடர்பாக நான் தாராபுரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் ஒன்றை கொடுத்தேன். அங்கு நான் நடந்த விவரங்களைச் சொன்னேன். மேற்படி வாக்குமூலம் அ.சா.ஆ.10. போலீசார் சம்பவம் தொடர்பாக என்னை விசாரித்தார்கள்

<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் என்னை 24.10.2018 ஆம் தேதி விசாரித்தார்கள். அப்போது என்னை விசாரித்த போது 21.10.2018 ஆம் தேதி எதிரிகள் ராமுவை தேடி வந்ததாக நான் அவர்களிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அப்போது அவர்களிடம் ராமு குளிக்கப் போய் இருப்பதாக சொன்னதாக போலீஸ் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அதற்கு

முன்பு இரண்டு முறை எதிரிகள் இருவரும் ராமுவை தேடி பட்டறைக்கு வந்த விசயத்தை 24 ஆம் தேதி போலீசார் என்னை விசாரித்த போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி தேதியில் போலீஸ் விசாரணையின் போது இறந்து போன ராமுவின் செருப்பு மற்றும் சட்டையை வைத்து என்னுடைய தம்பி வீரக்குமார் அடையாளம் சொன்னதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ராமு என்னோடு வேலை செய்த காலகட்டத்தில் வேறு எந்தெந்த நபர்களிடம் வேலை செய்தார் என்பதும் என்ன சம்பளம் வாங்கினார் என்பதும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். மேற்படி ராமு என்னுடைய ஒர்க் ஷாப்பில் நிரந்தர பணியாளர் இல்லை என்றாலும் அவர் எந்தெந்த தேதியில் என்னுடைய ஒர்க் ஷாப்பில் வேலை செய்தார் என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றாலும் சரிதான். ராமு என்னிடம் வேலை பார்த்ததை காட்ட எந்தவிதமான ஆதாரங்களும் கிடையாது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்பட்ட புகைப்படத்தில் இறந்து போன நபரின் முகம் முழுவதும் தோல் உரிந்து போய் புழுக்கள் இருந்ததால் என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. ராமு என்னிடம் வேலை செய்த போது பல நாட்களில் என்னுடைய ஒர்க் ஷாப்பில் தங்கி விடுவார் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு வீட்டுக்கு சென்று விட்டால் பல நாட்கள் கழித்து தான் அவர் ஒர்க்ஷாப்பிற்கு வருவார் என்று சொன்னால் சரிதான். ராமு என்னிடம் வேலை செய்த நாட்களில் எந்தெந்த நாட்களில் என்னென்ன ஆடை அணிந்து இருந்தார் என்பது குறித்து என்னால் சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். வேலையை முடித்துவிட்டு ராமு எங்கெங்கு செல்வார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இரண்டரை மாதங்கள் கழித்து தான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன்பு மூலனூர் காவல் துறையினர் எனக்கு அழைப்பானை வழங்கி அழைத்துக் கொண்டு போய் தான் வாக்குமூலத்தை பதிவு

செய்ய வைத்தார்கள் என்றால் சரிதான். அதற்கு முன்பு நான் எப்போதும் நீதிமன்றத்திற்கு சென்று சாட்சியமளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பு போலீசார் எந்த மாதிரியான வாக்குமூலம் வழங்க வேண்டும் என்று எனக்கு அறிவுறுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3. முதல்விசாரணை வாக்குமூலத்திலும் நீதித்துறை நடுவர் முன்பு அளித்த வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ள விபரங்கள் படி எந்த விதமான நிகழ்வும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன ராமு என்னிடம் எப்போதும் வேலை பார்க்கவில்லை என்றாலும் நான் ஒர்க் ஷாப் வைத்து நடத்துவதால் போலீசாரின் தயவு வேண்டும் என்பதற்காக அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இப்படி ராமு என்னிடம் வேலை பார்க்காததால் தான் அவர் எந்தெந்த நாட்களில் என்னிடம் வேலை பார்த்தார் என்றும் அவர் வேலை பார்த்ததற்கான ஆவணங்கள் எதையும் என்னால் தாக்கல் செய்ய முடியவில்லை என்று சொன்னால் சரிஅல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2–ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.15 19:07:05 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.9**

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரக்குமார் | Caste | |
| Father's Name | : கருப்புசாமி | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 15.10.2025

**முதல் விசாரணை**

1. நான் மூக்குத்தரித்தான்பாளையத்தில் குடியிருக்கிறேன். புதுப்பையில் என்னுடைய அண்ணனின் லேத் பட்டறையில் வேலை செய்கிறேன். சாட்சி ஆறுமுகம் என்னுடைய அண்ணன். 21 10 2018 ஆம் தேதி காலை சுமார் 8.00 மணிக்கு மேற்படி லேத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன் என்னுடன் என்னுடைய அண்ணனும் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது இறந்து போன ராமு பட்டறையில் வேலை இருக்கிறதா என்று கேட்பதற்காக அங்கு வந்தார். அப்போது என்னுடைய அண்ணன் அவரிடம் வேலை குறைவாக தான் இருக்கிறது என்றும் அவரும் நானும் சேர்ந்து வேலை செய்து விடுவதாக அவரிடம் சொன்னார். அவ்வாறு சொல்லிவிட்டு என்னுடைய அண்ணன் அங்கிருந்து கிளம்பி விட்டார். ஆனால் ராமு ஒர்க்ஷாப்பில் இருந்து கிளம்பவில்லை. அவர் என்னுடன் சேர்ந்து பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்தார். என்னுடைய அண்ணன் ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் பட்டறைக்கு வந்தார். ராமுவை அங்கே வேலை பார்க்க சொல்லி சொன்னார். நான் சுமார் 5.00 அல்லது 6.00 மணிக்கு வேலை முடித்துவிட்டு என்னுடைய வீட்டிற்கு கிளம்பி விட்டேன்.பின்னிட்டு 24.10.2018 ம் தேதி மூலனூர் காவல்

நிலைய போலீசார் என்னுடைய அண்ணனின் ஒர்க்ஷாப்பிற்கு வந்தனர். அங்கு எங்களிடம் போட்டோ செருப்பு மற்றும் சட்டை ஆகியவற்றை காட்டினார்கள். போட்டோவை பார்த்து அடையாளம் தெரியவில்லை ஆனால் செருப்பு மற்றும் சட்டை பார்த்து அது ராமுவுடையது என்பதை தெரிந்து கொண்டோம். அதன் பிறகு போலீசார் அங்கிருந்து கிளம்பி விட்டார்கள் மேற்படி சம்பவம் தொடர்பாக போலீசாரணை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னை போலீசார் 24.10.2018 ஆம் தேதி விசாரித்தார்கள். போலீசார் வந்து விசாரித்தபோது 21.10.2018 ஆம் தேதி காலை இறந்து போன ராமு என்னுடைய அண்ணனின் பட்டறைக்கு வேலை கேட்டு வந்ததாகவும் என்னுடைய அண்ணன் வேலை இல்லை என்று சொல்லிவிட்டு வெளியே சென்றதாகவும் அதற்கு பின்னிட்டும் மேற்படி ராமு எங்கள் பட்டறையில் வேலை செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். போலீசாரிடம் மேற்படி 24. 10 2018 ஆம் தேதி போலீசார் இறந்து போன ராமுவின் துணி மற்றும் செருப்புகளை நேரடியாக காட்டி கேட்டதாக தான் குறிப்பிட்டுள்ளேன். போலீசாரிடம் 21 ஆம் தேதி மேற்படி இறந்து போன ராமு என்ன நிறத்திலும் என்ன வகையான ஆடைகளை அணிந்திருந்தார் என்பது குறித்து நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் அதை நான் கவனிக்கவில்லை.

2. மேற்படி இறந்துபோன ராமு பட்டறைக்கு எவ்வளவு நாட்கள் வேலைக்கு வந்தார் எந்தெந்த தேதிகளில் வேலை பார்த்தார் என்பதும் எவ்வபோது வேலை விட்டு சென்றார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். ராமு வேலைக்கு வந்த நாட்களில் எந்தெந்த நாட்களில் என்னென்ன உடை அணிந்து இருந்தார் என்பது குறித்து என்னால் சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணை குறிப்பிட்டவாறு 21 ஆம் தேதி மேற்படி ராமு எங்கள் பட்டறைக்கு வந்து வேலை செய்யவில்லை என்றாலும் நாங்கள் பட்டறையில் வேலை செய்வதால் போலீசாரின் தயவு

வேண்டும் என்பதற்காக அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய அண்ணனின் பட்டறையில் வேலை செய்வதற்கும் மேற்படி ராமு அங்கு வேலை செய்தார் என்பதற்கும் எந்தவிதமான ஆதரவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணையில் குறிப்பிட்டவாறு எந்தவிதமான நிகழ்வும் நடைபெறுவதால் தான் அதற்கான ஆதரவு எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2-ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.15 19:07:13 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

<u>DEPOSITION OF WITNESS</u>
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.10**

| | | | |
|---|---|---|---|
| Name | : மணி | Caste | |
| Father's Name | : ஆறுமுகம் | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 15.10.2025

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் கோவில் மேட்டுப்புதூரில் குடி இருக்கிறேன். நான் இலைக் கடை வைத்திருக்கிறேன். இறந்துபோன ராமு என்பவரை எனக்கு தெரியும். கடந்த 21.10.2018 ஆம் தேதி சாட்சி ஆறுமுகத்தின் லேத்திற்கு சென்றேன். அப்போது இறந்து போன ராமு ஆறுமுகத்திடம் வேலை கேட்டுக் கொண்டிருந்தார். அவர் ராமுவிடம் வேலை எதுவும் இல்லை என்றும் இருந்தால் சொல்வதாகவும் சொன்னார். நான் அங்கிருந்து ஜல்லி எடுத்துவிட்டு திரும்ப வந்துவிட்டேன். அதன் பிறகு நான்கு நாட்கள் கழித்து போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் மேற்படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. போலீஸ் விசாரணையின் போது கடந்த 24.10.2018 ஆம் தேதி போலீசார் என்னிடம் ஒரு ஆண்ட்ராய்டு போனில் இருந்த போட்டோ செருப்பு சட்டை ஆகியவற்றை அடையாளம் காட்டி கேட்டார்கள் என்றும் மேற்படி பொருட்கள் இறந்து போன ராமு உடையது என்று சொன்னதாகவும் குறிப்பிட்டு விட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்கள் ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எந்தெந்த தேதிகளில் மேற்படி பட்டறைக்கு சென்றேன் என்பதையோ அந்த அந்த தேதிகளில் யார் யாரை சந்தித்தேன் என்பதையும் என்னால் குறிப்பாக சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். ராமு என்பவரை எந்தெந்த தேதிகளில் எந்தெந்த இடங்களில் சந்தித்தேன் என்று குறிப்பாக சொல்ல முடியாது என்று சொன்னால் தேதி வரிசையாக சொல்ல முடியாது ஆனால் கடைவீதியில் பார்ப்பேன். நான் முதல் விசாரணை குறிப்பிட்டவாறு 21ஆம் தேதி ராமு சாட்சி ஆறுமுகத்தின் பட்டறைக்கு வரவில்லை என்றாலும் நான் போலீசார் கேட்டுக்கொள்கிறேன் நான் பார்க்கவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவ்வாறு பார்த்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

**2–ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.15 19:07:19 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.11**

| | | | |
|---|---|---|---|
| Name | : நீலவேணி | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 15.10.2025

முதல் விசாரணை

நான் வெள்ளகோவில் குடியிருக்கிறேன். கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எதிரி கவிதா என்னுடைய அக்கா. இறந்து போன ராமு என்னுடைய அக்காவின் கணவர். ஆறு வருடத்துக்கு முன்பு ஒரு நாள் நான் என்னுடைய கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தேன்அப்போது போலீசார் என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு ராமு இறந்து விட்டதாகவும் அவரது உடலை கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்திருப்பதாகவும் தகவல் சொன்னார்கள். என்னுடைய அக்கா சென்ற போது நான் உடன் சென்றேன். மேற்படி அக்காவின் வீட்டுக்காரரின் உடலை எனக்கு காட்டினார். என்னுடைய அக்கா மேற்படி உடலை பார்த்து விட்டு அது அவரது கணவரின் உடல் என்று சொன்னார். என்னுடைய அக்கா சொல்லித்தான் அவருடைய உடலை போலீசார் அடையாளம் தெரிந்து கொண்டார்கள். பின்னிட்டு போலீசார் ராமுவின் உடலை கொடுத்தார்கள் அதை நாங்கள் கொண்டு வந்து விட்டோம். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்து போன ராமுவின் உடலை இரண்டாவது எதிரியிடம் தான் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய அக்கா கணவர் நிரந்தரமான குடிகாரர் என்று சொன்னால் சரிதான். என்னுடைய அக்காவின் கணவர் மனம் போன போக்கில் சென்று விட்டு மூன்று நான்கு மாதங்கள் கழித்து தான் வீட்டுக்கு வருவார் என்று சொன்னால் சரிதான். பொது இடங்களில் குடித்துவிட்டு அனைவரிடமும் சண்டை போடுவதை வாடிக்கையாக வைத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு சண்டை போடும் போது தன்னுடைய உடைகளை அவிழ்த்துவிட்டு நிர்வாணமாக இருப்பதும் கெட்ட வார்த்தைகள் பேசுவதும் அவரது வழக்கம் என்றாலும் அது தொடர்பாக என்னிடம் நிறைய பேர் புகார் சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அவர் என்னுடைய சகோதரியின் வீட்டிற்கு எப்போது வருவார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். அவர் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில் உள்ள நபர்களுடன் சண்டை போடுவதை அவர் வழக்கமாக வைத்திருந்தார் என்றால் சரிதான்.

**2–ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.15 19:07:25 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.